**தலைப்பு 290 – கடற்றொழில் மற்றும் நீர் வாழ் வளங்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 290 - கடற்றொழில் மற்றும் நீர் வாழ் வளங்கள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 திசெம்பர் 07 திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 2,201.66 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 1,777.12 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 424.54 மில்லியன் அதாவது 19.28 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருவன | 384.46 | 376.72 | 7.74 | 2.01 |
| மூலதனம் | 1,817.20 | 1,400.40 | 416.80 | 22.94 |
| **மொத்தம்** | **2,201.66** | **1,777.12** | **424.54** | **19.28** |

(ஆ) **ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக திணைக்களத்திற்கு கடற்தொழில் மற்றும் நீர் வாழ் வளங்கள் அமைச்சினால் ரூபா 8.6 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரையில் அதில் ரூபா 8.0 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 0.6 மில்லியன் அதாவது 6.98 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**2.2 வருமானக் கணக்கு**

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்**

திணைக்களத்தினால் 2015 ஆண்டிற்கான வருமானக் குறியீடு ஒன்றிற்காக ரூபா 23 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 22.8 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவை மதிப்பீட்டு வருமானத்தில் 99.1 சதவீதமாகும்.

| வருமானக் குறியீடு | 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு | | | மதிப்பீட்டு வருமானத்தில் சதவீதமாக பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | பற்றாக்குறை | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 10.03.07.06 | 23.00 | 22.78 | 0.22 | 0.96 |

**2.3 முற்பணக் கணக்கு**

**2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 29001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடி யானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடி யானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியான து** |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 24.99 | 16.67 | 16.49 | 19.28 | 105.00 | 73.48 |

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் கீழுள்ள நான்கு வைப்புக் கணக்குகளுக்குரிய 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4.5 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **வைப்புக் கணக்கு இலக்கம்** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0096/000 | 0.25 |
| 6000/0000/00/0016/0047/000 | 1.17 |
| 6000/0000/00/0018/0055/000 | 0.05 |
| 6000/0000/00/0006/0073/000 | 3.03 |
| **மொத்தம்** | **4.50** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

கடற்றொழில் மற்றும் நீர் வாழ் வளங்கள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் இற்றைப்படுத்தப்பட்டிருக்காமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | **பதிவேடுகளின் வகை** | **உரிய பிரமாணம்** |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | வாகனப் பட்டியல் | நிதிப் பிரமாணங்கள் 1647(உ) |
| (iii) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப் பிரமாணங்கள் 214 |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.2.1 பாதீட்டு முரண்கள்

தியவர திரிய கடன் உத்தேசத் திட்டத்தின் கீழ் வட்டி மானியம் செலுத்துவதற்காக செலவு விடயம் 290-1-1-3-1504 இன் கீழ் ரூபா 42.0 மில்லியனுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதில் ரூபா 2.7 மில்லியன் நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் வேறு செலவு விடயம் ஒன்றிற்கு மாற்றப்பட்ட பின்னர் தேறிய ஏற்பாடுகளில் இருந்து ரூபா 5.6 மில்லியன் அதாவது 14.25 சதவீதம் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.2.2 ஏனைய அமைச்சுக்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு

கடற்றொழில் மற்றும் நீர் வாழ் வளங்கள் அமைச்சின் சுயதொழில் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக கடற்தொழில் மற்றும் நீர் வாழ் வளங்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளின் பயன்பாடுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடற்றொழில் மற்றும் நீர்வாழ் வள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் 15 மாவட்டங்களுக்காக பின் விளைச்சல் தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் வீண் விரயங்களை குறைப்பதற்கு தேவையான அறிவு மற்றும் உபகரணங்கள் மீனவ மக்களுக்கு வழங்கும் நோக்குடன் ரூபா 8.26 மில்லியன் நிதிஏற்பாடுகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந்த மொத்த ஏற்பாடுகளும் காலி மாவட்டத்தில் நாகுலுகமுவ பிரதேசத்தில் சுயதொழில் மேம்பாட்டு விடயங்களுக்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும் இதன் பிரகாரம் பின் விளைச்சல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல் மூலம் வீண் விரயங்களைக் குறைக்கும் குறிக்கோளை நெருங்கும் போது தேவையான அறிவினை வழங்குதல் கட்டாயமாக இருந்த போதிலும் அதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சுயதொழில் பயற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 297,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) செயற்திட்டத்தினை அமுல்படுத்தும் போது நலன்பெறுவோர்களினால் எதுவித மூலதனமும் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் செயற்திட்டத்தினை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்காக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவ்வப்போது செயலாற்றலினை மீளாய்வு செய்தல் கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும், அவ் விடயம் தகவல்களை திரட்டுவதற்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) சுயதொழில் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 3.59 மில்லியன் செலவிடப்பட்டு 60 மாசி சூளைகள் தயாரித்துக் கொடுத்தல் மற்றும் ரூபா 1.95 மில்லியன் செலவிடப்பட்டு 500 லீட்டர் நீர் தொட்டிகள் 440 கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யும் போது அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.14 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ் உபகரணங்களுடன் 360 அலுமினிய சட்டிகள் ரூபா 2.40 மில்லியன் செலவில் கொள்வனவு செய்திருந்ததுடன் அந்த அலுமினிய சட்டிகளை நலன்பெறுவோருக்கு விநியோகிக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்துவதற்காக போதியளவு தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 வருமானக் கணக்குகள்**

கடற்றொழில் மற்றும் நீர் வாழ் வளங்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் 10.03.07.06 கொண்ட வருமானக் குறியீட்டின் கீழ் அனுமதிப்பத்திரக் கட்டணத்திற்காக வருமான மதிப்பீடு தயாரித்தல், வருமானம் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகள் சமர்ப்பித்தல் போன்ற பொறுப்புக்கள் சாட்டப்பட்டிருந்தன. இந்த வருமானக் குறியீடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் தேறிய வருமான 51 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. உயிரட்ட சிப்பிக் கவசப் போக்குவரத்திற்கான அனுமதிப்பத்திர வருமானத்தில் மற்றும் சுகாதாரச் சான்றிதழ் வருமானத்தில் முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக முறையே ரூபா 1,678,250 அல்லது 26 சதவீதத்தினால் மற்றும் ரூபா 2,196,800 அல்லது 41 சதவீதமான குறைவடைவொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2013, 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் நிலுவை வருமானம் தொடர்பாக வெற்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீன்பிடிப் படகுத் துறைகளை பதிவு செய்தல் வருமானத்தில் முன்னைய ஆண்டிற்கான நிலுவைக் கட்டணமாக ரூபா 45,000 தொகை 2015 ஆண்டின் வருமானத்தில் அடங்கியிருந்தமையால் நிலுவை வருமானம் சரியான முறையில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

விடய இலக்கம் 29001 கொண்ட அரசாங்க அலுவலர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள்**

04 ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடன் ரூபா 410,203 கூட்டுத்தொகையான பணம் நிலுவையாகக் காணப்பட்டது. அந்த கடன் மீதி 01 வருடம் முதல் 18 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவை கடன் மீதி தொடர்பாக தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.1 மற்றும் 4.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை கடன் தொகையை அறவீடு செய்வதற்காக திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி**

சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 01 வருடம் முதல் 22 வரை பழமையான ரூபா 419,534 கூட்டுத்தெகையான 12 கடன் மீதிகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(இ) வேலை இடை நிறுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதி**

வேலை இடை நிறுத்தப்பட்டுள்ள 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்படும் ரூபா 536,010 இற்கான கடன் மீதிகளில் மீளாய்வாண்டு இறுதி வரை பணம் எதனையும் அறவீடு செய்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஈ) **சேவையை இராஜினாமா செய்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி**

2015 திசெம்பர் 29 திகதி விலகிக் சென்றுள்ள உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 141,450 கடன் மீதியினை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவீடு செய்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**3.5 நல்லாளுகையும் கணக்களித்தகைமையும்**

**3.5.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

கடற்றொழில் மற்றும் நீர் வாழ் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் 2015 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் ரூபா 99.3 மில்லியன் செலவிடப்பட்டு மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த கடற்றொழில் மற்றும் நீர் வாழ் வளங்கள் திணைக்களத்திற்குரிய 83 அபிவிருத்தி செயற்பாடுகள் திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.2 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் அடங்கியுள்ள 6 கணக்காய்வு பணிகளில் எதுவித பணியும் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**3.5.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், அவ் அறிக்கை 2016 ஜூலை 28 திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) **விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

ரூபா 1,085,000 பெறுமதியான 03 மோட்டார் வாகனங்கள் 02 வருடங்களாக விளைவற்ற நிலையில் காணப்பட்டன.

(ஆ) **வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கான அறிக்கை 2016 மே 06 திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) **வேறு நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

உணவு மற்றும் விவசாய அமைப்புக்குச் சொந்தமான ரூபா 2,600,000 தொகையான வாகனமொன்று 2015 ஆண்டு முதல் முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) **தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 292,554,168 ஆகும். 06 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட பின்னர் மீதியாக ரூபா 209,404 தொகை காணப்பட்ட போதிலும் அம் மீதியினை மிகைத்து ரூபா 2,466,478 இற்கான பொறுப்புகள் ஏற்பட்டுள்ளன.

### 3.7 இணங்காமைகள்

தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| நிதிப்பிரமாணம் 565(5) | வைப்புக்களின் மாதாந்த பொழிப்புக் கூற்று தொடர்ந்து வரும் மாதம் முடிவடைவதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பொது நிருவாக சுற்றறிக்கை | |
| 1997 பெப்ரவரி 03 திகதிய 06/97 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | பதவி ஒன்றில் பதில் கடமையாற்றும் உச்ச காலம் 03 மாதங்களாக இருந்த போதிலும், சிரேஷ்ட வானொலி உத்தியோகத்தரொருவர் 2010 திசெம்பர் 15 ஆந் திகதி முதல் உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்ப) பதவியில் கடமை மேவுகை செய்வதற்காக 2011 ஆகஸ்ட் 15 முதல் 2015 ஆகஸ்ட் 17 வரை கடமையாற்றுவதற்காக நியமனம் பெற்றிருந்தார். 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்காக நிரந்தர அலுவலர் ஒருவரை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(இ) அரச நிதி சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2015 ஜூலை 10 திகதிய 2/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | பாவனைக்கு உதவாதது என இனங்காணப்பட்ட வாகனம் ஒன்றினை அகற்றுவதற்கான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அகற்றுவதற்காக இனங்காணப்பட்ட வாகனங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமையின் காரணமாக ஒரு வாகனத்தின் சுக்கான் பெட்டி காணாமல் போயுள்ளது. |

### 3.8 உள்நாட்டு நிதியளித்தல் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

#### 3.8.1 எரிபொருள் விலை அதிகரிப்பின் காரணமாக மீன் பிடி கைத்தொழில்களுக்கு ஏற்பட்டுள்ள பாதகமான தாக்கங்களை குறைப்பதற்காக மீன் பிடி படகுகளின் உரிமையாளர்களுக்கு எரிபொருள் மானியங்கள் வழங்குதல்

எரிபொருள் விலை அதிகரிப்பின் காரணமாக மீன் பிடி கைத்தொழிலுக்கு ஏற்படும் பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்காக மீன் பிடி படகுகளின் உரிமையாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட எரிபொருள் விலையின் மானியம் ஒன்றாக வழங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டம் ஒன்று 2012 மார்ச் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தல் கடற்றொழில் மற்றும் நீர் வாழ் வளங்கள் திணைக்களத்திற்கு சாட்டப்பட்டிருந்ததுடன் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அதற்காக இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

2013 செப்தெம்பர் வரை அமுலில் இருந்த இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக எரிபொருள் கூப்பன்கள் அச்சிடுவதற்காக ரூபா 5,501,420 மற்றும் மானியங்களுக்காக காசோலைகள் மற்றும் திறைசேரி முறிகளின் மூலம் ரூபா 4,549,775,000 ஆக மொத்தம் ரூபா 45,465,276,420 கூட்டுத்தொகை திறைசேரியினால் செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீன்பிடி படகுகளின் உரிமையாளர்களுக்கு உண்மையாக வழங்கப்பட்ட எரிபொருளின் பெறுமதியினை மாத்திரம் கடற்றொழில் மற்றும் நீர் வாழ் வளங்கள் திணைக்களத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு மீளளிப்பு செய்வதற்குப் பதிலாக கூட்டுத்தாபனத்தினால் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்ட மொத்த எரிபொருள் கூப்பன்களின் பெறுமதியாகிய ரூபா 4,549.77 மில்லியன் தொகை கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் பெற்றுக் கொண்ட தகவல்களின் பிரகாரம் அக் கூட்டுத்தாபனத்தினால் எரிபொருள் மானியமாக மீன்பிடி படகுகளின் உரிமையாளர்களுக்கு வழங்கியிருந்த எரிபொருளின் பெறுமதி ரூபா 4,373.68 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் ரூபா 176.09 மில்லியன் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இந்த மேலதிக கொடுப்பனவில் திணைக்களத்தின் கைவசம் இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்ட கூப்பன்களுக்குரிய பெறுமதியான ரூபா 75.46 மில்லியன் தொகையும் அடங்கியுள்ளது. இதன் பிரகாரம் அப் பெறுமதியினை அல்லது கொடுப்பனவு மேற்கொள்வதனைத் தடுப்பதற்கேனும் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் இறுதிக் கொடுப்பனவு திறைசேரி முறி ஒன்றின் மூலம் 2014 பெப்ரவரி 10 திகதி செலுத்தப்பட்டிருந்தமையால் இது தொடர்பாக திறைசேரியை அறிவுறுத்துவதற்கான திணைக்களத்தின் பொறுப்பு முறைப்படி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) திறைசேரி முறி ஒன்றின் மூலம் செலுத்தப்பட்டிருந்த ரூபா 4,329.78 மில்லியன் தொடர்பாக திறைசேரியினால் வட்டி செலுத்தப்படுவதினால் மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 176.09 மில்லியன் தொடர்பாக திறைசேரி வருடாந்தம் செலுத்தும் வட்டி அரசுக்கு ஏற்படும் நட்டமொன்றாகியுள்ளது.

(ஈ) இலங்கை பெற்றோலியக் கூட்டுப்தாபனத்தினால் படகுகளின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருளின் பெறுமதி என குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 4373.68 மில்லியன் தொகையினை பிழையற்ற தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) திணைக்களத்தின் எரிபொருள் கூப்பன்கள் தொடர்பாக இருப்பு அறிக்கையின் பிரகாரம் மீனவர்களுக்கு வழங்கப்படக் கூடியதாக இருந்த கூப்பன்களின் பெறுமதி ரூபா 4474.32 மில்லியன் ஆக காணப்பட்ட போதிலும் ரூபா 4,490.15 இற்கான கூப்பன்கள் வழங்கப்பட்டுள்ளதாக திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 15.83 மில்லியன் பெறுமதியான கூப்பன்கள் மிகையாக வழங்கியுள்ளன. இந்த மிகையாக வழங்கியிருத்தல் தொடர்பாக முறையான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.8.2 எரிபொருள் மானியத் திட்டத்தின் மாற்றீடாக மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்குதல்**

---

எரிபொருள் மானியம் வழங்குவதற்கு மாற்றீடாக 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த மீனவ பிரஜைகளுக்கு புதிய தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 3,390.12 மில்லியன் செலவிடுவதற்காக திட்டமிட்டிருந்ததுடன், அதனது செயற்பாடுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த வெளியே என்ஜின் உடனான 2 வகையான படகுகளின் 14811 நலன்பெறுவோருக்காக மீன்பிடி வலைகள் G.P.S உபகரணங்கள் மற்றும் உயிர் பாதுகாப்பு கவசங்கள் வழங்குதல் 2015 திசெம்பர் 31 திகதி வரையும் முடிவடைந்திருக்கவில்லை.

(ஆ) அந்த படகுகளுக்கு உரித்துடைய எஞ்சிய நலன்பெறுவோருக்கு மீன்பிடி வலைகள் வழங்குதல் 2015 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவ் விடயத்தில் இலக்கினை அடைந்திருக்கவில்லை.

(இ) உட்பகுதியில் என்ஜின் உடனான ஒரு நாள் பிரயாண படகுகளின் உரிமையாளர்களுக்கு வழங்க வேண்டிய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல்தின மீன்பிடி படகுகளுக்காக VMS உபகரணங்கள் பொருத்திக் கொடுப்பதற்கு 2015 ஆண்டின் போது ரூபா 605 மில்லியன் நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2016 ஜூலை 31 ஆந் திகதி வரை அப்பணியினை நிறைவேற்றுவதற்கு முடியாது போயிருந்தது.

(உ) 2014, 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 2.216 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டு மீன்பிடி உற்பத்திகளை அதிகரிப்பதற்காக இந்த எரிபொருள் மானியத்திற்கான மாற்றீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருந்த போதிலும் அதனை முறையாக திட்டமிட்ட அடிப்படையில் துரிதமாக அமுல்படுத்துவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. எவ்வாறாயினும், 2015 ஆண்டின் போது மொத்த மீன் உற்பத்தி 14,860 மெற்றிக் தொன்களால் அதாவது 2.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. அத்துடன் மொத்த உள்நாட்டு உற்பத்திக்காக மீன்பிடித் துறையின் பங்களிப்பு 1.5 சதவீதத்தில் இருந்து 1.3 வரை குறைந்திருந்தது.

**3.8.3 ஹம்பாந்தோட்டை மீன்பிடித் துறைமுக நிர்மாணத்தின் காரணமாக இடம் பெயர்ந்த பாரவலை மீனவர்களுக்கு சலுகை வழங்கள்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹம்பாந்தோட்டை மீன்பிடித் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டதன் காரணமாக தொழில்களை இழந்துள்ள பாரவலை மீன்பிடி தொழிலாளர்கள் 7 பேருக்கு ஒரு நாள் பிரயாண மீன்பிடி படகு ஒன்று வீதம் மற்றும் தேவையான ஏனைய உபகரணங்கள் வழங்குவதற்காக 2007 அக்டோபர் 18 திகதி இலக்கம் அமப/07/1656/351/029 கொண்ட அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2008 ஆண்டு இந்த செயற்திட்டம் முடிவாக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் 6 மீனவர்களுக்கு மாத்திரம் படகுகள் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இணங்கியவாறு மீனவர் ஒருவருக்கு படகு வழங்கியிருக்கவில்லை. அத்துடன் 7 மீனவர்களுக்கும் மீன்பிடி வலைகள் வழங்குவதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) வழங்குனரினால் உற்பத்தி செய்யப்பட்டு ஒப்படைக்கத் தவறும் படகுக்காக செலுத்தியிருந்த ரூபா 773,000 தொகையினை திருப்பி பெறுவதற்காக நடவடிக்கை எடுக்காமையால் அது அரசாங்கத்திற்கு ஏற்படுத்திய நட்டமொன்றென அவதானிக்கப்பட்டது.

**3.9 செயலாற்றல்**

2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீடு, செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**போதியளவினதாக நிறைவேற்றப்படாத பணிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தினால் இலக்கிடப்பட்ட பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **பணி** | **வருடாந்த இலக்கு** | **நிவைேற்றப் பட்ட எண்ணிக்கை** | **மேற்கொள்ளல் சதவீதம்** |
|---|---|---|---|
| | அலகுகள் | அலகுகள் | |
| பல்தின படகுகளுக்காக சம்பவக் குறிப்பு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளல் | 40,000 | 16,073 | 40 |
| மீன்பிடி படகுகளை காப்புறுதி செய்தல் | 25,246 | 16,496 | 65 |
| மீன்பிடி தொழிலாளர்களை காப்புறுதி செய்தல் | 64,621 | 28,496 | 44 |

| | | | |
|---|---|---|---|
| மீன்பிடி அடையாள அட்டைகள் வழங்குதல் | 4,501 | 1,698 | 38 |
| கடல் இசைவுச் சான்றிதழ் வழங்குதல் | 25,000 | 12,809 | 51 |

(ஆ) திணைக்களம் தனது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு பணிகளுக்குமாக நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.10 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

உதவிப் பணிப்பாளர் (தொழிநுட்ப) III பதவிக்காக திணைக்களத்தின் சிரேஷ்ட ஒலிபரப்பு அலுவலர் ஒருவர் 2015 ஆகஸ்ட் 17 திகதி முதல் நியமனம் பெற்றிருந்தார். அரச சேவைகள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் இப் பதவிக்காக எழுத்துமூல பரீட்சை ஒன்று நடத்தப்பட்டு உள்ளக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும் கடற்றொழில் மற்றும் நீர் வாழ் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் விதப்புரையின் பிரகாரம் இந்த சந்தர்ப்பத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்படும் வகையில் எழுத்து மூல பரீட்சை தவிர்த்து நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் மாத்திரம் குறிப்பிட்ட பதவிக்காக ஆட்சேர்ப்புக்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் வழங்கியிருந்த அங்கீகாரத்தின் மீது நேர்முகப் பரீட்சை ஒன்று நடத்தப்பட்டிருந்தது. அங்கு நேர்முகப் பரீட்சை நடாத்தும் குழுவினால் சிரேஷ்ட வானொலி அலுவலருக்கு தகவல் தொழிநுட்பம் பற்றி 360 மணித்தியால பாடநெறிக்குப் பதிலாக 120 மணித்தியால பாடநெறியொன்றினை கற்றிருந்தமைக்காக 05 புள்ளிகளும், ஆங்கில பாஷை தேர்ச்சிக்காக சான்றிதழொன்றிற்காக பாடநெறி ஒன்று படித்தார் என வழங்கியிருந்த சமர்ப்பித்திருந்த கடிதம் ஒன்றிற்காக 05 புள்ளிகளுமாக தவறாக வழங்கப்பட்டிருந்தது.

இவ் உத்தியோகத்தரை 1983 ஆண்டின் போது கனிஷ்ட வானொலி அலுவலர் பதவிக்கு நியமனம் செய்யும் போது தேவையான தகைமைகள் நிறைவேற்றியிருக்கவில்லை. அத்துடன் 1986 ஆண்டின் போது அப் பதவியில் நிரந்தப்படுத்தப்பட்டு அத்துடன் சிரேஷ்ட வானொலி அலுவலர் பதவிக்கு பதவியுயர்த்தப்பட்டிருந்தார்.

**3.11 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக் கப்பட்ட பதவியணி யினர் | உள்ளபடி யான பதவியணி யினர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை | மிகை களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 48 | 28 | 20 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 21 | 11 | 10 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 881 | 475 | 406 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 107 | 86 | 21 | - |
| (v) | ஏனைய(அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 02 | - | 02 |
| | **மொத்தம்** | **1,057** | **602** | **457** | **02** |

மீளாய்வாண்டு இறுதியளவில் சிரேஷ்ட, மூன்றாம் மற்றும் இரண்டாம் நிலைகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினால் 42 சதவீதத்தை மிகைத்த வெற்றிடத் தொகையொன்று காணப்பட்டது. திணைக்களத்தினால் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் 2015 ஆண்டிற்காக தயாரித்திருந்த ஒதுக்கீட்டு கணக்குகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளைப் பயன்படுத்தாமல் சேமிப்பாக காணப்பட்ட போதும், அந்த சேமிப்புக்கு பதவியணி வெற்றிடங்கள் நிலவுவதை பாதித்திருக்கவில்லை. இதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மிகை மதிப்பீடு ஒன்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.